

சிகரத்தின்

# தினத் தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL

தமிழ் சமுதாயத்தின் குரல்

TAMIL DAILY Rs. 4

Vol: 13 ● Issue: 354 14.10.2026 ● புதன்கிழமை ● சென்னை ● கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● பக்கம் 6 ● விலை ரூ.4




**தமிழகத்தின் முழுநேர ஆளுநராக நியமிக்கப்பட்டார் ஆர்லேகர்**

**6,199 சிறப்பு பஸ்கள்: நாளை முதல் இயக்கம்**

**பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்கள் உடற்கல்வி வகுப்புகள்**












## அ.தி.மு.கவைச் சேர்ந்த

# 6 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செல்லும்!

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு






**சென்னை, அக்.14:** கடந்த சட்டமன்ற தேர்தலில் அண்ணா தி.மு.க. எம்எல்ஏக்களாக வெற்றி பெற்ற எம்.ஆர். விஜயபாஸ்கர், சி. விஜயபாஸ்கர், பெருந்துறை ஜெயக்குமார், இசக்கி சுப்பையா உள்ளிட்ட 6 பேர் ராஜினாமா செய்தனர். பின்னர், அவர்கள் தவெகவில் இணைந்தனர். இவர்களில் மரகதம் குமரவேல், சத்தியபாமா இருவரும் முறையே மதுராந்தகம், தாராபுரம் தனித் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்று எம்எல்ஏக்களாக பொறுப்பு ஏற்றுக் கொண்டனர்.

இவர்கள் 6 பேரின் ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றுக் கொண்டார். அவரின் உத்தரவை எதிர்த்து அண்ணா தி.மு.க. கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தேசிய மக்கள் சக்தி கட்சி தலைவர் எம்.எல். ரவி ஆகியோர் தனித்தனியே வழக்கை தாக்கல் செய்தனர். தகுதிநீக்க நடவடிக்கை நிலுவையில் இருக்கும் சூழலில், அவர்களின் ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றது செல்லாது, எனவே ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

**விசாரணை நடத்தவில்லை**

வழக்கில், மனுதாரர்கள், சபாநாயகர், சட்டசபை செயலாளர் ஆகியோர் தரப்பில் வாதங்களும் முன் வைக்கப்பட்டன. ராஜினாமா அளிக்கப்பட்ட அதே நாளில் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசிதழிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டதைச் சுட்டிக்காட்டிய மனுதாரர் தரப்பு, ராஜினாமாக்களின் பின்னணி குறித்து உரிய விசாரணை நடத்தப்படவில்லை என்று வாதிட்டது. மேலும், தங்களது கருத்தைத் தெரிவிக்க அ.தி.மு.க.வுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கோரியது. சபாநாயகர் தரப்பில், சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ.க்களிடம் நேரடியாக விசாரித்து, அவர்கள் சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே ராஜினாமா செய்ததை உறுதி செய்த பின்னர்தான் கடிதங்கள் ஏற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ராஜினாமா உண்மையானதா, தன்னிச்சையாக அளிக்கப்பட்டதா என்பதை உறுதிசெய்வதே அரசியலமைப்புச் சட்டத்தின் 190 (3)(B) பிரிவின்படி சபாநாயகரின் கடமை என்று வாதிடப்பட்டது. அனைத்து வாதங்களும் நிறைவு பெற்றுவிட்ட நிலையில், வழக்கில் முக்கிய தீர்ப்பை சென்னை ஐகோர்ட் அறிவித்துள்ளது.

உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி தர்மாதிகாரி, நீதிபதி அருள்முருகன் அமர்வு தீர்ப்பை அறிவித்தனர். அதில், அண்ணா தி.மு.க.வின் 6 எம்எல்ஏக்களின் ராஜினாமா கடிதங்களை சபாநாயகர் ஏற்றுக் கொண்டது செல்லும், அவர்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கை குறித்து 2 மாதங்களில் சபாநாயகர் முடிவு எடுக்க வேண்டும் என்று கூறி உள்ளனர்.

2026 மே 13-ஆம் தேதி சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கைவாக்கெடுப்பின்போது, கட்சியின் கொறடா உத்தரவுக்கு மாறாக சில உறுப்பினர்கள் த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்ததாக அ.தி.மு.க. குற்றம்சாட்டியது. இதன் அடிப்படையில், அரசியலமைப்புச் சட்டத்தின் பத்தாவது அட்டவணையின்கீழ் தகுதிநீக்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

தற்போதைய தீர்ப்பு ராஜினாமா ஏற்பு தொடர்பான விவகாரத்தில் சபாநாயகரின் முடிவை உறுதி செய்தாலும், தகுதிநீக்க நடவடிக்கைகளின் இறுதி முடிவைத் தீர்மானிக்கவில்லை. அந்த நடவடிக்கைகளை 2 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவு, இந்த வழக்கின் அடுத்த கட்ட முக்கியத்துவமாக கருதப்படுகின்றது.

## கோவையில் ரூ.300 கோடி மதிப்பில்

# ‘பெரியார் அறிவுலகம்’ - அக்.16-ல் முதல்வர் விஜய் திறக்கிறார்




**கோவை, அக்.14:** கோவை காந்திபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ‘பெரியார் அறிவுலகம்’ வளாகத்தை முதல்வர் விஜய் வரும் 16-ம் தேதி திறந்து வைக்கிறார்.

தமிழக பொதுப்பணித் துறையின் சார்பில், கோவை காந்திபுரம் நஞ்சப்பா சாலையில் மத்திய பேருந்து நிலையம் எதிரே, சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில், 6.98 ஏக்கர் பரப்பளவில், 1 லட்சத்து 98 ஆயிரம் சதுரடியில் தரைத்தளம் மற்றும் 7 தளங்களுடன் ரூ.300 கோடி மதிப்பில் ‘பெரியார் அறிவுலகம்’ எனப்படும் ‘பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம்’ கட்டப்பட்டுள்ளது.

கடந்த 2024-ல் தொடங்கப்பட்ட இப்பணி தற்போது நிறைவடைந்துள்ளது. திட்ட மதிப்பில், ரூ.245 கோடி கட்டுமானப் பணிக்கும், ரூ.50 கோடி புத்தகங்கள் வாங்குவதற்கும், ரூ.5 கோடி இ-புத்தகங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வளாகம் ‘ஏ’ மற்றும் ‘பி’ என இரு பிளாக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளன. தரைத்தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம், 350 பேர் அமரக் கூடிய ஆடிட்டோரியம், அறிவியல் உபகரணங்களுடன் கூடிய அறிவியல் மையம், விண்வெளியை கண்டுகளிக்கும் வகையில் கோளரங்கம், ஸ்பேஸ் லிஃப்ட் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் வரவேற்பறை, அறிவியல் மையம், 2-வது தளத்தில் சொந்தமாக புத்தகம் எடுத்து வருபவர்கள் படிக்க குறிப்பிட்ட இடமும், சிறுவர்களுக்கான நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. 3-ம் தளத்தில் போட்டித்தேர்வு பயிற்சி மையம், நிர்வாகப் பிரிவு, நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

4-ம் தளத்தில் வரலாற்று புத்தகங்கள் பிரிவு, தமிழ் நூல்கள் பிரிவு, பருவ இதழ்கள், 5-வது தளத்தில் ஆங்கில நூல்கள் பிரிவு, ஸ்டார்ப் அப் நிறுவனங்களுக்கான இன்குபேஷன் சென்டர், 6-வது தளத்தில் ஆங்கிலம் கற்கும் பிரிவு, இன்குபேஷன் சென்டர், 7-வது தளத்தில் அறிவியல் மையம் மற்றும் டிஜிட்டல் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

பெரியார் அறிவுலகத்தின் திறப்பு விழா வரும் 16-ம் தேதி நடைபெறுகிறது. முதல்வர் விஜய் கலந்து கொண்டு இம்மையத்தை திறந்து வைக்கிறார். அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தினர் கூறும்போது, “வரும் 16-ம் தேதி கோவை வரும் முதல்வர் விஜய், நஞ்சப்பா சாலையில் கட்டப்பட்டுள்ள பெரியார் அறிவுலகம் எனப்படும் நூலகம் மற்றும் அறிவியல் மையத்தை திறந்து வைக்கிறார். மற்ற நிகழ்வுகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை” என்றனர். கோவை காவல் துறை அதிகாரிகள் கூறும்போது, “முதல்வர் வருகையையொட்டி, தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன” என்றனர்.

# யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு கட்டண வசூல் ஒத்திவைப்பு!

**புதுடில்லி, அக்.14:** நாடு முழுவதும் யுபிஐ அல்லது டெபிட் கார்டுகள் மூலம் ரூ. 2,000-க்கு மேற்பட்ட வணிகப் பரிவாத்தனைகளுக்கு 0.4 சதவிகிதம் எம்டிஆா வசூலிக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சகம் அறிவித்திருந்தது.

அதன்படி, ரூ. 2000க்கும் மேல் பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளும்போது 0.4 சதவிகிதம் கட்டணம் செலுத்த வேண்டும். உதாரணமாக ஒருவர் ரூ. 3000 பொருள் அல்லது சேவை பெறும்போது, அந்தத் தொகை யுபிஐ மூலம் செலுத்தினால், அதற்கு வணிகர் ரூ. 12 கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டியது வரும். ஒரு வேளை ரூ. 50 ஆயிரத்துக்கு பொருள்கள் வாங்கினால் அதற்கு வணிகர் ரூ. 200 கட்டணமாக செலுத்துவார். ரூ. 75,000-க்கு மேற்பட்ட வணிகப் பரிவாத்தனைகளுக்கு ரூ. 300 உச்சவரம்பு கட்டணமாக நிாணயிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறை வருகின்ற அக்டோபர் 15 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று இந்திய தேசிய பணப் பரிவாத்தனை நிறுவனம் அறிவித்திருந்தது.

இதனிடையே, ஆயுதப்பூஜை, தசரா, தீபாவளி என அடுத்தடுத்து பண்டிகைகள் வரும் நிலையில், யுபிஐ பணப்பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் முறை அமலுக்கு வந்தால், பெருமளவில் இழப்பு ஏற்படும் என்று வணிகர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனவே யுபிஐ கட்டண முறையை ஒத்திவைக்க மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த நிலையில், தீபாவளி பண்டிகை முடியும் வரை யுபிஐ பணப்பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் முறையை அமல்படுத்தப் போவதில்லை என்றும், புதிய தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




சிகரத்தின் தினத்தென்றல்

### திசையன்விளையில் யூபிஜ கட்டண விதிப்பை கண்டித்து

# அனைத்து வியாபாரிகள் சங்க பேரமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



**திசையன்விளை, அக்.14:** நெல்லை மாவட்டம் திசையன்விளையில் அனைத்து வியாபாரிகள் சங்க பேரமைப்பு சார்பில் யூ பி பணவர்த்தனையில் நாலு சதவீத கட்டண விதிப்பை மத்திய அரசுதிரும்ப வலியுறுத்தி திசையன்விளை பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் திசையன்விளை அனைத்து வியாபாரிகள் சங்க பேரமைப்பு தலைவர் சாந்தகுமார் .பேரமைப்பு மாநில இணைச்செயலாளர் தங்கையா கணேசன், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் சுயம்பு ராஜன் .பிரதீப் ஸ்வீட்ஸ் முருகானந்தம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி பி எம் குமார், பாலகிருஷ்ணன், ரவி டெண்டுல்கர், பாஸ்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர் . அத்துடன் கடைகள் தோறும் யுபிஜ வரிவிதிப்பு கண்டன எதிர்ப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது..

# வேலூரில் போதை மாத்திரை விற்ற சென்னை இளைஞர்கள் கைது



**வேலூர், அக்.14:** வேலூர் ஓட்டேரி அருகே, போதை மாத்திரை விற்ற சென்னை இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

வேலூர் மாவட்டம், பாகாயம் போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட ஓட்டேரி ஏரிக்கரை அருகே கன்னிக்கோவில் பகுதியில் போதை மாத்திரைகள் பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாகக் போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, எஸ்.ஐ., சவுந்தர்ராஜன் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் தீவிரக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியாக டூவீலரில் சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த இருவரைப் பிடித்து விசாரித்தனர்.

அப்போது, அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதால், உடமைகளைச் சோதனையிட்டபோது, சட்டவிரோதமாக விற்பனைக்காக வைத்திருந்த 56 தபேண்டடால் போதை மாத்திரைகளும், ஐந்து சிரிஞ்சுகளும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில், அவர்கள் சென்னை மயிலாப்பூர் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ்,29, மற்றும் தினேஷ்,23, என்பது தெரியவந்தது. இதையடுத்து இருவரையும் கைது செய்த போலீசார், அவர்கள் பயன்படுத்திய டூவீலரையும் பறிமுதல் செய்தனர்.

சம்பவம் நடந்த பகுதிக்கு அருகிலேயே அரசு கலைக் கல்லூரி மற்றும் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, பள்ளி, கல்லூரி மாணவர்களைக் குறிவைத்து இந்தப் போதை மாத்திரை கும்பல் செயல்படுகிறதா ? என்ற கோணத்தில் தீவிர விசாரணை நடத்தி, கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## க்ரைம் கார்னர்

### புளியங்குடியில் 17 பவுன் நகை கொள்ளை : வேலூர் நபர் கைது!



**தென்காசி, அக்.14:** தென்காசி மாவட்டம் புளியங்குடியில், தனியார் நிதி நிறுவன மேலாளர் முத்துக்குமார் - அரசு பள்ளி ஆசிரியை சுதா தம்பதியின் வீட்டின் பூட்டை உடைத்து 17 பவுன் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது.

இதுகுறித்து டிஎஸ்பி நமச்சிவாயம் தலைமையில் தனிப்படை அமைத்து விசாரித்த போலீசார், வாகன தணிக்கையின் போது வேலூர் மாவட்டம் அணைக்கட்டை சேர்ந்த மணிகண்டன் (42) என்பவரை கைது செய்தனர்.

அவர் 80-க்கும் மேற்பட்ட கொள்ளை வழக்குகளில் தொடர்புடையவர் எனவும், அவரிடமிருந்து தங்க நகைகள், ஆயுதங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

### லஞ்சம் கேட்ட வரி ஆய்வாளர் கைது

**கரூர், அக்.14:** கரூர் - திருச்சி சாலை காந்தி கிராமம் பகுதியை சேர்ந்த, 45 வயதுள்ள பெண் ஒருவர், புதிதாக கட்டும் வீட்டுக்கு வரி நிர்ணயம் செய்ய, சில நாட்களுக்கு முன் விண்ணப்பித்துள்ளார். மாநகராட்சி மண்டலம் - 3 அலுவலக வரி ஆய்வாளர் லோகேஸ்வரன், 35, வரி நிர்ணயம் செய்ய, 3,000 ரூபாய் லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் தர விரும்பாத அந்த பெண், கரூர் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் செய்தார். கரூர் லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி., ஜான் தலைமையிலான போலீசார், லோகேஸ்வரனை கையும் களவுமாக கைது செய்தனர்.

# ஜெம் வீரமணி வழக்கில் ஐபிஎஸ் அதிகாரிகள் அருண், கண்ணனிடம் 3 மணி நேரம் விசாரணை



**சென்னை, அக்.14:** ஜெம் கிரானைட்ஸ் அதிபர் வீரமணி வழக்கில், ஐ.பி.எஸ். அதிகாரிகளான அருண், கண்ணன் ஆகியோரிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் 3 மணி நேரத்துக்கும் மேலாக அதிரடி விசாரணை நடத்தி உள்ளனர்.

பணம், நகை, ஆடம்பர பொருட்களை ஆசைகாட்டி, ஏழ்மையைப் பயன்படுத்தி ஏராளமான சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் ஜெம் கிரானைட்ஸ் அதிபர் வீரமணி, அவரது உதவியாளர் சாந்தி,கணவர் மகேந்திர சிம்மன், முன்னாள் உதவியாளர் கணேசன் மற்றும் கார் ஓட்டுநர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சென்னை மத்திய குற்றப் பிரிவு கூடுதல் காவல் ஆணையர் தேன்மொழி தலைமையில் அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வு குழு நடத்திய விசாரணையில், இதுவரை 10 சிறுமிகள் பாதிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இது தொடர்பாக வீரமணி மீது இதுவரை 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே, வீரமணியை மிரட்டி பணம் பறித்த விவகாரத்தில் காவல் துறை உயரதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக அடுத்தடுத்து திடுக்கிடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனைத் தொடர்ந்து, முன்னாள் சென்னை காவல் ஆணையர் அருண், தென் சென்னை கூடுதல் காவல் ஆணையராக இருந்த கண்ணன் ஆகியோர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டனர். இந்நிலையில், ஐபிஎஸ் அதிகாரிகள் அருண், கண்ணனிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக தீவிர விசாரணை நடத்தினர்.

ஜெம் வீரமணி வழக்கை முடிவுக்குக் கொண்டுவர முயன்றது ஏன்? இந்த வழக்கில் இதற்காக ஏதேனும் அழுத்தம் வந்ததா? என்பது குறித்தும் 80-க்கும் மேற்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டு, இருவரிடமும் எழுத்துப்பூர்வமாக பதில்கள் பெறப்பட்டுள்ளன. இந்த விசாரணையை தொடர்ந்து மிரட்டல் தரகர்கள் பலர் சிக்கவும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே ஜெம் வீரமணியை மிரட்டி பணம் பறித்தவர்கள் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதை அடிப்படையாக வைத்து அடுத்த கட்ட நடவடிக்கையை சிறப்பு புலனாய்வு குழு மேற்கொண்டுள்ளது. இதனால், இந்த வழக்கு மீண்டும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

### நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியும்

# 'ஐஎன்எஸ் மாங்ரோல்' கடற்படையில் இணைப்பு



**மும்பை, அக்.14:** நீர்மூழ்கிக் கப்பலை கண்டறியும் ஐஎன்எஸ் மாங்ரோல் நேற்று மும்பையில் கடற்படையில் முறைப்படி இணைக்கப்பட்டது.

கொச்சியில் உள்ள 'கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட்' நிறுவனத்தால் கட்டப்பட்ட இந்தக் கப்பல், நீர்மூழ்கிக் கப்பல்களின் அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து அழிக்கவும், கடல் சார் ரோந்து விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் பிற போர்க்கப்பல்களுடன் இணைந்து இயங்கும் திறனையும் கொண்டது. மேலும் இது கடல் கண்காணிப்பு, குறைந்த தீவிர கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் கண்ணிவெடி போர்ப் பயிற்சிகளிலும் ஈடுபடும் திறன் படைத்தது.

துறைமுகங்கள், கடலோரப் பகுதிகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதுடன், கடற்படையின் ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்கும் இது உறுதுணையாக இருக்கும்.

குஜராத்தின் ஜூனாகட் மாவட்டத்தில் உள்ள ஒரு கடலோர மீன்பிடி நகரமான மாங்ரோலை மையமாகக் கொண்டு இக்கப்பலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஏப்ரல் 2004 வரை இந்திய கடற்படையில் சேவை ஆற்றிய ஐஎன்எஸ் மாங்ரோல் கண்ணிவெடி அகற்றும் 'மைன் ஸ்வீப்பர்' ரகப் போர்க்கப்பலின் பாரம்பரியத்தை இந்தப் புதிய கப்பல் முன்னெடுத்துச் செல்கிறது.

பழைய போர்க்கப்பல்களின் பெயர்களையும், பெருமையையும் அடுத்த தலைமுறை கப்பல்களுக்குச் சூட்டும் கடற்படையின் பாரம்பரியத்தின்படி இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்போர்க்கப்பல் 80 சதவீதத்திற்கும் அதிகமான உள்நாட்டுப் பொருட்களால் கட்டப்பட்டுள்ளது. நவீன போர்க் கப்பல் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆயுதங்கள்/சென்சார்களை ஒருங்கிணைப்பதில் இந்தியாவின் வளர்ந்து வரும் சுயசார்புத் திறனை இந்த கப்பல் வெளிப்படுத்துகிறது.

### வடபழனி – பூந்தமல்லி இடையே மெட்ரோ ரயில் சேவை

# இரண்டே நாளில் 70 ஆயிரம் பேர் பயணம்



**சென்னை, அக்.14:** இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், முதல் ரயில் சேவை வடபழனி - பூந்தமல்லி இடையே தொடங்கிய நிலையில், முதல் நாளில் வெறும் 5 மணி நேரத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளனர்.

இரண்டு நாட்களில் மொத்தம் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் வடபழனி - பூந்தமல்லி (15 கி.மீ.) வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் விஜய் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் காலை தொடங்கி வைத்தனர்.

இதன்பிறகு, இத்தடத்தில் பொதுமக்களுக்கான மெட்ரோ ரயில் சேவை மாலையில் தொடங்கியது. இரு மார்க்கத்திலும் பயணிகள் மிகுந்த உற்சாகத்துடன் மெட்ரோ ரயில்களில் பயணித்தனர்.

இந் நிலையில், இத்தடத்தில் இயக்கப்பட்ட மெட்ரோ ரயில்களில் நேற்று முன்தினம் மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை 5 மணி நேரத்தில் 25,474 பேர் பயணித்துள்ளனர்.

2-வது நாளான நேற்றும் காலை முதல் மெட்ரோ ரயிலில் பயணிப்போர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்தது. குறிப்பாக காலை, மாலை நெரிசல் மிகுந்த நேரத்தில் கூட்டம் அலைமோதியது.

நேற்று 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளதாக மெட்ரோ ரயில் அலுவலக வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. இரண்டு நாட்களில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளனர்.

இந்த தடத்தில் தற்போது வரை 11 மெட்ரோ ரயில் நிலையங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இதன்மூலம் மக்களின் பயண நேரம் குறையும். போக்குவரத்து நெரிசலில் சிக்கும் அவதியும் இனி இருக்காது.

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் மாதவரம் - சோழிங் நல்லூர் வரையிலான 5-வது வழித்தடத்தின் ஒரு பகுதியாக கோயம்பேடு முதல் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையம் வரையிலான உயர்மட்ட வழித்தடத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர மெட்ரோ ரயில் நிர்வாகம் முயற்சி எடுத்து வருகிறது.

இத்தடத்தில் மொத்தம் 12 மெட்ரோ ரயில் நிலையங்கள் இடம்பெற வாய்ப்புள்ளது. அடுத்த 6 மாதங்களில் இத்தடத்தை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

### டிஜிட்டல் கைது என கூறி

# முதியவரிடம் ரூ.46.50 லட்சம் மோசடி: கோவையை சேர்ந்த 2 பேர் கைது



**சிவகங்கை, அக்.14:** காரைக்குடியில் முதிய வரை டிஜிட்டல் கைது செய்த தாகக் கூறி ரூ.46.50 லட்சம் மோசடி செய்த கோவை யைச் சேர்ந்த இருவரை சைபர் குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த முதியவர் ஒருவரின் செல்போனில் பெங்களூரு காவல்துறை அதிகாரிகள் பேசுவதாகக் கூறி சிலர் தொடர்பு கொண்டனர். அவரது ஆதார் அட்டையை தவறான செயல்களில் பயன்படுத்தியதால் அவரை டிஜிட்டல் கைது செய்துள்ளதாகக் கூறி மிரட்டினர். பின்னர் பணம் கொடுத்தால் வழக்கிலிருந்து விடுவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். இதை நம்பிய அந்த முதியவர், தன்னைத் தொடர்பு கொண்டவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு ரூ.46.50 லட்சம் அனுப்பி யுள்ளார். அதன்பிறகு தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த அந்த முதியவர், மாவட்ட சைபர் குற்றப்பிரிவு போலீஸாரிடம் புகார் கொடுத்தார்.

இதைத் தொடர்ந்து போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்தனர். விசாரணை அடிப்படையில், கோயம்புத்தூரைச் சேர்ந்த ஹிதேஷ் சஞ்ஷெட்டி (33) சையத் ரஹ்மான் (44) ஆகிய இருவரை கைது செய்தனர்.

# ஆசிரியர் தகுதித்தேர்வு முடிவுகள் வெளியீடு

**சென்னை, அக்.14:** ஆசிரியர் தகுதித்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளன.

அரசு பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தகுதித்தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கடந்த ஆண்டு ஒரு உத்தரவை பிறப்பித்தது.

இதனை தொடர்ந்து தமிழக அரசு பள்ளிகளில் பணிபுரிய கூடிய ஆசிரியர்களுக்கு சிறப்பு தகுதித்தேர்வு நடத்த திட்டமிட்டது. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டது. தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கடந்த ஜூலை 4-ந்தேதி, உயர்நிலை பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஜூலை 5-ந்தேதி தேர்வு நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் 833 மையங்களில் சிறப்பு தகுதித்தேர்வு நடந்தது. முதல் தாள் தேர்வு 221 மையங்களிலும் 2-ம் தாள் தேர்வு 612 மையங்களிலும் நடைபெற்றது.

முதல் தாள் தேர்வை 59,535 பேரும், 2-வது தாள் தேர்வை ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 929 பேரும் எழுதியிருந்தனர். இந்த நிலையில், ஆசிரியர் தகுதித்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளன. குறைக்கப்பட்ட தகுதி மதிப்பெண்கள் அடிப்படையில் வெளியான முடிவின்படி, பட்டதாரி ஆசிரியர் தேர்வு எழுதிய ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 929 பேரில் 61,153 பேரும், இடைநிலை ஆசிரியர் தேர்வு எழுதிய 59,535 பேரில் 47,628 பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

## தார் சாலை அமைக்க கோரி போராட்டம்



திருநெல்வேலி மாநகராட்சி மண்டலத்திற்குட்பட்ட 15 வார்டு இராமயான்பட்டி கரீம்சா அவுலியா பள்ளிவாசல் செல்லும் சாலை ஜல்லி கற்களால் நிரப்பப்பட்டு சாலை முழுவதுமாக தார் சாலை அமைக்கவில்லை. அப்பகுதியில் இஸ்லாமியர்களின் பள்ளிவாசல் மற்றும் தர்கா உள்ளதால் பள்ளிவாசலுக்கு செல்வோர் மற்றும் குடியிருப்பு வாசிகள் செல்வதற்கு சிரமப்படுகிறார்கள். பலமுறை மாநகராட்சியில் மனு கொடுத்து இதுவரை சாலையை சீரமைக்க வில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர் அதேபோல் வருகின்ற மாதங்களில் தர்காவில் கந்தூரி விழா நடைபெற இருப்பதாலும் இதை கண்டித்து அப்பகுதி மக்கள் பள்ளிவாசல் முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## டில்லி போராட்டத்தால் வர்த்தகர்களுக்கு ரூ.2,000 கோடி இழப்பு

**புதுடில்லி, அக்.14:** டில்லியில் நடைபெற்ற போராட்டத்தால் ரூ.2 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, டில்லியில் உள்ள வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பின் தலைவர் பிரிஜேஷ் கோயல், காவல் ஆணையருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி, டெல்லியில் கடந்த சில நாட்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த 10-ம் தேதி நடைபெற்ற போராட்டத்தின் போது, பல பகுதிகளில் உள்ள கடைகளை உள்ளூர் அதிகாரிகள் மூடுமாறு தெரிவித்தனர்.

சில இடங்களில் போலீஸார் மற்றும் நிர்வாகத்தினர் அழுத்தம் கொடுத்தனர். இதனால், பல்வேறு இடங்களில் வர்த்தகம் முற்றிலும் முடங்கியது. இதன் காரணமாக, டெல்லி முழுவதும் சுமார் ரூ.2,000 கோடி வர்த்தக



இழப்பு ஏற்பட்டது.

எனவே, போராட்டங்களின்போது கடைகளை மூடுமாறு வர்த்தகர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. சந்தைகள் தொடர்ந்து செயல்படுவதற்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நவராத்திரி மற்றும் ராம்லீலா நிகழ்ச்சிகள் நடைபெற்று வரும் நிலையில், தீபாவளி பண்டிகையும் நெருங்குகிறது.

இதனால், சந்தைகளில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். இத்தகைய சூழலில், கடையடைப்பு அல்லது பிற இடையூறுகள் ஏற்பட்டால் விற்பனை பாதிக்கப்படும். எனவே, மீண்டும் இதுபோன்ற இடையூறுகள் ஏற்படாமல் தடுக்க வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது..

### பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின்

## இடைக்கால பாதிப்பு மண்டலமாக 128.19 ஹெக்டேர் பரப்பு அடையாளம்

### உயர்நீதிமன்றத்தில் அரசு தகவல்



**சென்னை, அக்.14:** பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் இடைக்கால பாதிப்பு மண்டலமாக, 36 சர்வே எண்களில் உள்ள 128.19 ஹெக்டேர் பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் உயர் நீதி மன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கரணை ராம்சார் சதுப்பு நிலம் தொடர்பாக தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரணை மேற்கொண்ட தென் மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிமீ சுற்றளவுக்கு எந்தவொரு கட்டுமானங்களுக்கும் ஒப்புதல் வழங்கக்கூடாது என தமிழக அரசுக்கு கடந்தாண்டு செப்டம்பரில் உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவுப்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ), பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதிகளைச் சுற்றி சுமார் ஒரு கிமீ சுற்றளவுக்கு எந்தவொரு கட்டுமானங்களுக்கும் அனுமதி வழங்க முடியாது என மறுப்பு தெரிவித்து கடந்த 2025 அக்டோபரில் உத்தரவிட்டது.

இந்த உத்தரவால் பள்ளிக்கரணை பகுதிகளை சுற்றியுள்ள பகுதிகளில் அடுக்குமாடி கட்டுமானப்பணிகள் முழுமையாக ஸ்தம்பித்துள்ளதாகக் கூறி ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் கூட்டமைப்பான கிரெடாய் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அதில், எவ்வித அறிவியல் பூர்வமான ஆய்வும் மேற்கொள்ளாமல் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிமீ சுற்றளவுக்கு எந்தவொரு கட்டுமானங்களும் கட்டக்கூடாது என தேசிய பசுமை தீர்ப்பாயம் பிறப்பித்துள்ள உத்தரவு சட்ட விரோதமானது என்பதால் அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது மாநில சதுப்பு நில ஆணையம் தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் பி.வி. பாலசுப்பிரமணியம், “பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள இடைக்கால பாதிப்பு மண்டலமாக வரையறுக்கும் வகையில், 36 சர்வே எண்களில் உள்ள 128.19 ஹெக்டேர் பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது” என தெரிவித்தார்.

அதையடுத்து நீதிபதிகள், இதுதொடர்பான அறிக்கையை அக்.14-க்குள் தாக்கல் செய்ய வேண்டுமென மாநில சதுப்பு நில ஆணையத்துக்கு அறிவுறுத்தினர். அந்த அறிக்கையை பரிசீலித்து அக்.14 அன்று இந்த வழக்கில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என தெரிவித்து விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

### அன்புமணி வலியுறுத்தல்

பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதியில் பாமக தலைவர் அன்புமணி நேற்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், “பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் 3 கிமீ நீளத்துக்கு சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்கும் பணிகளை தமிழக அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை வரையறை செய்ய வேண்டும். தடுப்புச் சுவர், நடைபாதை அமைக்கும் திட்டத்தை நிறுத்த வேண்டும். இல்லையென்றால், எனது தலைமையில் மிகப்பெரிய போராட்டம் நடைபெறும்” என்றார்.

### வணிகச் செய்திகள்

## ஈரோடு மார்க்கெட்டில் மஞ்சள் குவிண்டால் ரூ.21 ஆயிரத்தை நெருங்கியது

**ஈரோடு, அக்.14:** தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில் தான் அதிகளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

எல்நினோ பருவநிலை மாற்றம் காரணமாக இந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் மழை அளவு குறைந்துள்ளது. இதன் காரணமாக பவானிசாகர் அணையில் போதிய அளவில் தண்ணீர் இருப்பு இல்லாததால் இந்த ஆண்டு எந்த பாசனங்களுக்கும் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மஞ்சள் சாகுபடி பாதியாக குறைந்துவிட்டது. நடப்பு பருவத்தில் மஞ்சள் சாகுபடி, விவசாயிகளிடம் மஞ்சள் இருப்பு குறைந்துள்ளதாலும் தற்போது மஞ்சள் விலை உயர தொடங்கி உள்ளது.

கடந்த மாதம் தொடக்கத்தில் ரூ.15 ஆயிரத்துக்கு விற்பனையான ஒரு குவிண்டால் மஞ்சள் அதைத்தொடர்ந்து படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. கடந்த 1-ந்தேதி ரூ.17 ஆயிரத்து 969-க்கு விற்பனையான ஒரு குவிண்டால் மஞ்சள் நேற்று ரூ.20 ஆயிரத்து 799-க்கு விற்பனை ஆனது. கடந்த 2 வாரத்தில் மட்டும் மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரத்து 800 வரை விலை உயர்ந்துள்ளது.

## மின்சார ஸ்கூட்டர்கள் விற்பனை 33% அதிகரிப்பு

**புதுடில்லி, அக்.14:** அதிகரித்து வரும் பெட்ரோல் விலை, கிட்டத்தட்ட பெட்ரோல் வாகனங்களுக்கான இணையான வாகன விலை, பராமரிப்பு செலவு குறைவு போன்ற காரணங்களால் கடந்த செப்., மாதத்தில் மின்சார ஸ்கூட்டர்களின் விற்பனை கடந்தாண்டை விட 33 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது ஸ்கூட்டர்கள் விற்பனையில் மூன்றில் ஒன்று மின்சார ஸ்கூட்டராக உள்ளது என வாஹன் டேஷ்போர்டு வெளியிட்டுள்ள தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார ஸ்கூட்டர்களின் சந்தை பங்கு (செப்.,) மின்சார ஸ்கூட்டர்கள் 33% பெட்ரோல் மற்றும் பிற ஸ்கூட்டர்கள் 67% மின்சார ஸ்கூட்டர்களின் வளர்ச்சி மின்சார ஸ்கூட்டர் வாகன பதிவு (செப்.,) டி.வி.எஸ்., மோட்டார் ஐ.கியூப் 54,000, பஜாஜ் ஆட்டோ சேட்டக் 48,500, டி.வி.எஸ்., ஐகியூப் 1.02 லட்சம், ஹோண்டா ஆக்டிவா 110 டி.எல்.எக்ஸ். 1.02 லட்சம் (ஆன் ரோடு விலை) பி.எம். இ-டிரைவ் திட்டம் (ரூபாயில்) மின்சார இருசக்கர வாகனங்களுக்கு அதிகபட்ச மானியம் 5,000.

### ஆயுத பூஜை மற்றும் விஜயதசமிக்கு

## 6,199 சிறப்பு பஸ்கள்: நாளை முதல் இயக்கம்

**சென்னை, அக்.14:** ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி தொடர் விடுமுறையையொட்டி, சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்குச் செல்ல 6,199 சிறப்புப் பஸ்கள் உட்பட, 3 நாட்களில் மொத்தம் 15,659 பேருந்துகள் இயக்கப்படும் என தமிழக போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

19-ம் தேதி ஆயுதபூஜை, 20-ம் தேதி விஜயதசமியையொட்டி வழக்கமாக இயக்கப்படும் பஸ்களோடு கூடுதலாக 6,190 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். கிளாம்பாக்கத்தில் இருந்து வழக்கம்போல் பஸ்கள் இயக்கப்படும். நாளை (15-ம் தேதி) முதல் 18-ம் தேதி வரை சிறப்பு பஸ்கள் இயக்கப்படும். தீபாவளியை முன்னிட்டு நவம்பம் மாதம் 5-ந்தேதி முதல் 7-ந்தேதி வரை 9,086 சிறப்பு பஸ்கள் உள்ளிட்ட 15,659 பஸ்கள் இயக்கப்படும்.

பண்டிகை நாட்களில் சிறப்பு பஸ்கள் ரத்து செய்யப்படும் என வெளியாகும் தகவலில் உண்மையில்லை. ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வாங்கினால் அதை திரும்ப வசூலித்து ஒப்படைத்து வருகிறோம். பண்டிகை நாட்களில் இயக்கப்படும் தனியார் பஸ்களுக்கான கட்டணம் விரைவில் அறிவிக்கப்படும். ஆம்னி பஸ் கட்டணத்தை கண்காணிக்க ஸ்பெஷல் குழு அமைக்கப்பட்டுள்ளது. கூடுதல் கட்டணம் வசூலித்தால் ஆம்னி பஸ்களை பறிமுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முன்பதிவு இல்லாத சிறப்பு ரெயில்கள் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ரெயில்வே துறையிடம் கேட்டுள்ளோம்.

தசரா விடுமுறையையொட்டி 2 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிளாம்பாக்கம் காலநிலை பூங்காவில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கப்படும். காலநிலை பூங்காவில் இருந்து வந்தவாசி வேலூர் தி.மலை பேருந்துகள் இயக்கப்படும். கும்பகோணம் பேருந்துகள் மறைமலை நகரில் இருந்து தற்காலிகமாக இயக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஹவுதி படைக்கு கடுமையான பதிலடி தரப்படும்

### சவுதி அரேபிய இளவரசர் உறுதி

**ரியாத், அக்.14:** ரியாத்: ரியாத்தில் உள்ள விமான நிலையம் மீது தாக்குதல் நடத்திய ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இளவரசர் அப்துல் அஜீஸ் பின் சல்மான் கூறியதாவது: சவுதி அரேபியாவுக்கு எதிராக ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் ரியாத்தின் கிங் காலித் சர்வதேச விமான நிலையம் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார். முன்னதாக அதே இடத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இதனால் விமான நிலையத்தின் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.



அவர்களின் இந்த தாக்குதல் சவுதி அரேபியாவின் உள்கட்டமைப்பு, நிறுவனங்கள், மக்கள் மற்றும் நமது உறுதியைச் சோதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

உலகிலேயே அதிக அளவில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடாகவும், இப்பகுதியின் மிக வலிமையான நாடாகவும் விளங்கும் சவுதியில், பில்லியன் கணக்கான டாலர்கள் ராணுவத்திற்காக செலவிடப்படுகிறது.

இருப்பினும், கடந்த பத்தாண்டுகளில் இவ்வளவு உயிரிழப்புகளை ஏற்படுத்திய மிக மோசமான தாக்குதலாக இது அமைந்துள்ளது. எரிசக்தி கட்டமைப்புகள் மீதான தாக்குதலை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. ரியாத் விமான நிலையம் மட்டுமல்லாமல், நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள தம்மாம் நகரில் அமைந்துள்ள கிங் ஃபாத் சர்வதேச விமான நிலையமும் குறிவைக்கப்பட்டது.

மேலும், நாட்டின் தெற்குப் பகுதியான காமிஸ் முஷைத் நகரில் உள்ள முக்கிய ராணுவ தளத்தை நோக்கி வந்த ஹவுதிகளின் பாலிஸ்டிக் ஏவுகணை இடைமறித்து அழிக்கப்பட்டது. அவர்கள் முழுமையான போர் குற்றத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு சவுதி தலைமையிலான கூட்டணி உறுதியான பதிலடியை வழங்கும். இவ்வாறு சல்மான் கூறினார்.

### பசுமைப் பட்டாசுகளை

## டெல்லியில் அனுமதிக்கலாம்: உச்ச நீதிமன்றம் கருத்து

**புதுடில்லி, அக்.14:** டில்லி காற்று மாசு தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கு, தலைமை நீதிபதி சூர்ய காந்த் நீதிபதிகள் ஜாய் மால்யா பக்ஷி, வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது பட்டாசு வணிகர்கள் கூட்டமைப்பு சார்பில், மூத்த வழக்கறிஞர் சாய் தீபக் ஆஜராகி, டெல்லியில் பட்டாசுக்கு முழுவதுமாக தடை விதிக்கப்பட்டுள்ள விவகாரம் குறித்து எடுத்துரைத்தார். நாடு முழுவதும் பண்டிகை காலங்களில் பட்டாசு வெடிக்க அனுமதி இருக்கும் நிலையில் டெல்லியில் முடக்கப்பட்டுள்ளதாகவும் இதை நீக்கி கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இதையடுத்து, முதியவர்கள், குழந்தைகள் பாதிக்காத வகையில் மாசு குறைந்த பசுமைப் பட்டாசுகளை விற்பனை செய்யவும், வெடிக்கவும் அனுமதிக்கலாம் என நீதிபதிகள் தெரிவித்தனர். விசாரணைக்காக வரும் 15-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

### தமிழகத்தின் முழுநேர

## ஆளுநராக நியமிக்கப்பட்ட ஆர்லேகர்

**சென்னை, அக்.14:** தமிழகத்தின் முழுநேர ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகரை நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

தமிழக ஆளுநராக கடந்த 2021-ம் ஆண்டு முதல் ஆர். என். ரவி பதவி வகித்து வந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் அவர் மேற்கு வங்க ஆளுநராக மாற்றப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, கேரள மாநில ஆளுநராகப் பதவி வகித்து வந்த ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகரிடம் தமிழக ஆளுநருக்கான கூடுதல் பொறுப்பு



வழங்கப்பட்டது. இந்நிலையில், அவர் முழுநேர ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாகக் குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: சிக்கிம் மாநில ஆளுநராக இருந்த ஓம் பிரகாஷ் மாத்தூர் கேரள மாநில ஆளுநராக மாற்றப்பட்டுள்ளார். கேரள மாநில ஆளுநராகப் பொறுப்பு வகித்த ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் தமிழகத்தின் முழுநேர ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒடிசா மாநில ஆளுநராக பிரஜ் மோகன் ராம், கர்நாடக மாநில ஆளுநராக டாக்டர் சுதா யாதவ், உத்தராகண்ட் மாநில ஆளுநராக டாக்டர் தால் சிங் பிசென் மற்றும் சிக்கிம் மாநிலத்தின் புதிய ஆளுநராக துஷ்யந்த் கவுதம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊழியர் சஸ்பெண்ட்: ரேஷன் கடைகள் இன்று வேலைநிறுத்தம்

**சென்னை, அக்.14:** தமிழக அரசு சார்பில் குறைவான விலைக்கு வெங்காயம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறை மூலமாக ரேஷன் கடைகளில் கிலோ ரூ.35-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மதுரவாயல் ரேஷன் கடையில் பொதுமக்களுக்கு தரமற்ற வெங்காயம் விற்பனை செய்யப்பட்ட புகார் எழுந்தது. அந்த புகாரை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட கடையின் விற்பனையாளரை சஸ்பெண்ட் செய்து காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இணைப் பதிவாளர் உத்தரவிட்டார்.

இந்தநிலையில், ரேஷன் கடை பணியாளர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதைக் கண்டித்து நாளை மாநிலம் தழுவிய அளவில் ரேஷன் கடைகளை அடைத்து போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு ரேஷன் கடை பணியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இன்று காலை 9 மணி முதல் ரேஷன் கடைகளை அடைத்து போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோடகன் கால்வாய் தூர்வாரி சரி செய்ய பொதுமக்கள் கோரிக்கை



திருநெல்வேலி மாநகராட்சிக்கு உட்பட்ட டவுன் வார்டு 16 ல் பகுதியில் கோடகன் கால்வாய் தூர்வாரப்படாமல் செடி கொடிகள் வளர்ந்து உபரி நீர் செல்லாமல் உள்ளது. மழைக்காலம் நெருங்குவதால் கால்வாயை தூர்வாரி சீர் செய்து உபரி நீர் செல்வதற்கு எதுவாக மாநகராட்சி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




VM
Residential Plots

# KUMARAN HIGHWAY CITY

KUTHAMBAKKAM, POONAMALLEE




| PLOT NO | EXTENT SQ.FT | PLOT NO | EXTENT SQ.FT |
|---|---|---|---|
| 1 | 1402 | 41 | 972 |
| 2 | 938 | 42 | 972 |
| 3 | 944 | 43 | 960 |
| 4 | 938 | 44 | 948 |
| 5 | 941 | 45 | 960 |
| 6 | 944 | 46 | 960 |
| 7 | 947 | 47 | 627 |
| 8 | 953 | 48 | 816 |
| 9 | 959 | 49 | 934 |
| 10 | 969 | 50 | 1080 |
| 11 | 981 | 51 | 1188 |
| 12 | 975 | 52 | 948 |
| 13 | 938 | 53 | 960 |
| 14 | 950 | 54 | 640 |
| 15 | 950 | 55 | 1678 |
| 16 | 950 | 56 | 1449 |
| 17 | 950 | 57 | 1031 |
| 18 | 950 | 58 | 630 |
| 19 | 950 | 59 | 681 |
| 20 | 950 | 60 | 693 |
| 21 | 950 | 61 | 693 |
| 22 | 950 | 62 | 693 |
| 23 | 950 | 63 | 489 |
| 24 | 950 | 64 | 384 |
| 25 | 1518 | 65 | 600 |
| 26 | 1309 | 66 | 600 |
| 27 | 1000 | 67 | 600 |
| 28 | 1000 | 68 | 588 |
| 29 | 1000 | 69 | 588 |
| 30 | 1000 | 70 | 600 |
| 31 | 1000 | 71 | 600 |
| 32 | 1000 | 72 | 495 |
| 33 | 1000 | 73 | 384 |
| 34 | 1000 | 74 | 459 |
| 35 | 1000 | 75 | 682 |
| 36 | 1000 | 76 | 658 |
| 37 | 1000 | 77 | 642 |
| 38 | 1000 | Commercial 1 | 4637 |
| 39 | 988 | Commercial 2 | 10148 |
| 40 | 777 | | |

## INDUSTRIAL PRESENCE AND DEVELOPMENT CLOSER TO THE LAND

NISSAN HYUNDAI SAINT-GOBAIN GLASS apollo SAMSUNG PERLOS FOXCONN

JABIL caparo NOKIA Connecting People DELL MOTOROLA FLEXTRONICS

# Valli Mayil Properties

130/4B, Redhills Road, 1st Floor, Pudur, Ambattur, Chennai-53.

muthaiah.kvb@gmail.com

www.vallimayilproperties.com

Contact

9080420748

## பள்ளிகளில் இனி வாரத்தில்

# 5 நாட்கள் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்: அமைச்சர் ராஜ்மோகன் அறிவிப்பு

**சென்னை, அக்.14:** "பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்" என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்தார். இதற்காக, தமிழக அரசின் மாநில பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கான திருத்திய கால அட்டவணையை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.



தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜ்மோகன், "இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகளை நடத்தப்படும். அதற்கு வழிவகை செய்யும் திருத்திய கால அட்டவணை வெளியிடுகிறோம். இனி தினந்தோறும் மாணவர்களுக்கு உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும். உடற்கல்வி வகுப்புகளைக் காட்டாயமாக ஒதுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அந்த வகுப்புகளை நிறுத்தக்கூடாது.

மாணவர்கள் உடற்பயிற்சி வகுப்புக்குச் செல்ல ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். அதற்கான மைதானங்கள், பயிற்சி, விளையாட்டு உபகரணங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடற்கல்வி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உள்ளன. அதில் 2 ஆயிரம் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளதாக நான் கண்டறிந்தேன்.

ஒரு உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடம் கூட இருக்கக்கூடாது என நான் உத்தரவிட்டுள்ளேன்.

அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. திருத்திய கால அட்டவணை மூலம் மாணவர்களுக்கு தினமும் உடற்கல்வி வகுப்புகள் கிடைத்துள்ளது.

சாதி, மதம், நிறம், விளையாட்டு திறன், உயரம், குள்ளம் என எதற்காகவும், எந்தக் குழந்தையையும் விளையாட்டில் இருந்து ஒதுக்கி வைக்காதீர்கள்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

## ரூ.5க்கு உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை

# ரூ.35 செலவழித்து வாங்கும் தவெக அரசு - டி.ஆர்.பி.ராஜா

**சென்னை, அக்.14:** தமிழகத்தில் தொடரும் மின்வெட்டு தவெக அரசிற்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருகிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க, தனியாரிடம் இருந்து ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.35-க்குக் கொள்முதல் செய்ய உள்ளதாக நேற்று (அக்டோபர் 12) அறிவித்துள்ளது தமிழ்நாடு அரசு. ஒரு யூனிட் மின்சாரம் ரூ.35-க்குக் கொள்முதலா என்று எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தொழிற்துறையின் முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா. எக்ஸ் தள பதிவில்,

ரூ.5-க்கு உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை ரூ.35 செலவழித்து வாங்கும் தவெக அரசின் நிர்வாகம்!

தேர்தலுக்கு பின் பதவி ஏற்ற #தவெக அரசு 2026 மே 23ல், முந்தைய திமுக அரசு அதிக விலைக்கு மின் கொள்முதல் செய்ததாகக் குற்றம்சாட்டி கேள்விக்குள்ளாக்கி னார்கள்!

அதே தவெக அரசு 2026 ஜூன் 25ல், நீண்டகால ஒப்பந்தங்கள் மூலம் குறைந்த விலையில் மின்சாரம் வாங்குவோம் என வாக்குறுதி அளித்தது.

ஆனால் 2026 அக்டோபர் 12ல், ஒரு யூனிட் ₹37 வரை கொடுத்து அவசர கதியில் மின்கொள்முதல்!

#திமுக ஆட்சியில் வெறும் ரூ.5.40 முதல் ரூ.9.50 வரை ஒப்புதல் பெற்ற மின்கொள்முதல் கட்டணங்கள் என்னவாயிற்று?

செப்டம்பர் 9-ஆம் தேதியே ஆந்திரா ரூ.16 முதல் ரூ.20 வரை தனக்கான அக்டோபர் மாத தேவைக்கான மின்சாரத்தை ஒப்பந்தம் செய்துவிட்டது.

தமிழ்நாடு அரசு ஜோசியம் பார்த்து கடைசி நேரம் வரை காத்திருந்ததா?

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் திறமையான



திராவிட மாடல் திமுக ஆட்சியில் உருவாக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் வடசென்னை அனல்மின் நிலையம் இரண்டும் சரியான நேரத்தில் தயாராக இருந்த நிலையிலும், இந்த அரசின் மோசமான திட்டமிடல் காரணத்தால் நிலக்கரி இருப்பு இல்லாமல் போனதால், தற்போது இவ்விரு நிலையங்களும் மிகக் குறைவான திறனில் செயல்படுகின்றன !

இவ்விரு நிலையங்களில் வெறும் 5 ரூபாய்க்கு உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை எதற்காக 7 மடங்கு அதிக விலை கொடுத்து ரூபாய் 35 முதல் 37 வரை வாங்குகிறது இந்த அரசு?

மின் உற்பத்தி, இறக்குமதி நிலக்கரி கொள்முதல் ஆகியவற்றில் இந்த அரசு படு மோசமாக சொதப்பியதால் தான் இன்று இந்த நிலை ! தற்போதைய ஒப்பந்தப்படி, வெறும் 20 நாட்களுக்கு முழு மின்சாரமும் வாங்கப்பட்டால் ரூ.3,100 கோடிக்கும் அதிகமான செலவு என்கிறார்கள் விஷயம் அறிந்தவர்கள்.

மக்களின் வரிப்பணத்தில் இப்படியொரு வீண் செலவு ஏன்? மின் கட்டணத்தை மட்டுமல்ல, இந்த முடிவுகளுக்கான முழுக் கணக்கையும் மக்களிடம் காட்டமுடியுமா? என அதில் பதிவிட்டுள்ளார்.

## மேல ரதவீதி டவுன் பகுதியில் வாகனங்களால் நெரிசல்: பொதுமக்கள் பாதிப்பு!



திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மேல ரதவீதி டவுன் பகுதியில் வாகனங்களால் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் இதனால் அப்பகுதியில் நடப்பதற்கும் பொதுமக்கள் சிரமப்படுகிறார்கள் மேலும் அந்த சாலையை ஆக்கிரமித்த வாகனங்களை அகற்றி வாகன போக்குவரத்து மற்றும் நடைபாதையை சீர் செய்ய வேண்டும் என போக்குவரத்து துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துகின்றனர்.

# தாலி செயின் பறிக்க முயன்ற திருடனுக்கு பொதுமக்கள் தர்ம அடி

## போலீசார் விசாரணை

**திண்டுக்கல், அக்.14:** திண்டுக்கல் மாவட்டத்தில் இன்று காலை நடுரோட்டில் பெண்ணொருவரிடம் தாலிச் சங்கிலியைப் பறிக்க முயன்ற நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து தர்ம அடி கொடுத்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



திண்டுக்கல் பகுதியில் உள்ள ஒரு சாலையில் பெண் ஒருவர் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவரை பின்தொடர்ந்து வந்த மர்ம நபர் ஒருவர், யாரும் எதிர்பாராத விதமாக திடீரென அந்தப் பெண்ணின் கழுத்தில் இருந்த 5 பவுன் தாலிச் சங்கிலியை பறிக்க முயன்றுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த அந்த பெண் பயந்து சத்தமிட்டு அலறியுள்ளார்.

பெண்ணின் அலறல் சத்தத்தைக் கேட்டு அக்கம் பக்கத்தினர் மற்றும் சாலையில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். பொதுமக்களைக் கண்டதும் அந்த திருடன் தப்பியோட முயன்றான். எனினும், சுதாரித்துக் கொண்ட பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து அந்த நபரை நாலாபுறமும் சூழ்ந்து ஓட ஓட விரட்டி மடக்கிப் பிடித்தனர்.

சங்கிலி பறிப்பில் ஈடுபட முயன்ற அந்த நபருக்கு நடுரோட்டிலேயே பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து தர்ம அடி கொடுத்தனர். பொதுமக்கள் கொடுத்த பலத்த அடியில் இருந்து தப்ப முடியாமல் அந்த நபர் கதிகலங்கிப் போனார்.

இதற்கிடையில், இந்த சம்பவம் குறித்து உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், பொதுமக்களிடம் இருந்து அந்த நபரை மீட்டு கைது செய்தனர். மேலும், இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து, பிடிபட்ட நபர் யார் என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## வேலுமணி தலைமையில் அதிருப்தி எம்எல்ஏக்கள் ஆலோசனை

# தவெக அரசுக்கு ஆதரவளிக்க ரகசிய திட்டம்

**சென்னை, அக்.14:** அதிமுக, பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் தொடர் தோல்விகளை சந்தித்து வருவதாக குற்றஞ்சாட்டி வரும் எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் தரப்பினர் பழனிசாமியை பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, தவெக அரசுக்கு ஆதரவளிக்க ரகசியத் திட்டம் தீட்டி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.



தமிழகத்தில் 2026 தேர்தலுக்குப் பிறகு, தவெக அரசுக்கு ஆதரவளிப்பதா, வேண்டாமா என்ற நிலைப்பாட்டில் இருவேறு கருத்துகள் உருவானது. பழனிசாமி ஆதரவளிக்கவில்லை. எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் தலைமையிலான அணி தவெக அரசுக்கு ஆதவளித்தது.

அன்று முதலே அதிமுக இரு அணிகளாக செயல்பட்டு வருகிறது. அப்போது எழுந்த உள்கட்சி பூசல் தற்போது வரை நீடித்து வருகிறது. பொதுத் தேர்தல் தோல்வி குறித்து விவாதிக்க பொதுக்குழுவை கூட்டுமாறு அதிருப்தி அணியினர் வலியுறுத்தினர். இதற்கிடையே, அதிமுகவைச் சேர்ந்த 6 எம்எல்ஏக்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்தனர். இவர்களில் 2 பேர் இடைத்தேர்தலில் தவெக சார்பில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றனர்.

கடந்த தேர்தலில் வென்ற அதிமுக இந்த இரு தொகுதிகளிலும், இம்முறை 3-ம் இடத்தை பிடித்தது. இதன்தொடர்ச்சியாக அதிமுகவில் உட்கட்சி பூசல் தீவிரமடைந்துள்ளது. இதற்கு மேல் பழனிசாமி அதிமுக தலைமை பொறுப்பை வகிக்கக் கூடாது என்பதில் வேலுமணி தரப்பு உறுதியாக உள்ளதாகத் தெரிகிறது. இந்நிலையில், கடந்த இரு நாட்களாக வேலுமணி, சண்முகம் உள்ளிட்ட அதிருப்தி எம்எல்ஏக்கள் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்தனர். இதில் நாமும் ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்து இடைத் தேர்தலை எதிர்கொள்ளலாமா என ஆலோசிக்கப்பட்டது.

அதன்பிறகு, பொதுக்குழுவை கூட்டி பொதுச்செயலாளர் பதவியிலிருந்து பழனிசாமியை நீக்கிவிட்டு, கட்சியைக் கைப்பற்றி தவெக அரசுக்கு அதிமுக சார்பில் ஆதரவளிப்பது தொடர்பாக ரகசியத் திட்டம் தீட்டி வருவதாகவும் பல்வேறு மாவட்ட செயலாளர்களை தொலைபேசி வழியாக தொடர்புகொண்டு பேசி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக அதிமுக மூத்த நிர்வாகி ஒருவரிடம் கேட்ட போது, "அதிமுகவுக்கு எதிராக செயல்படும் அவர்கள் செல்வச்செழிப்பில் உள்ளனர். அதை அதிமுக என்ற கட்சிதான் அவர்களுக்கு அளித்தது.

அதை அவர்கள் நினைத்து பார்க்க வேண்டும். அவர்களின் முயற்சி தோற்கும். ஒரு மாவட்ட செயலாளர் கூட அவர்கள் பக்கம் செல்லமாட்டார்கள். அனைவரும் பழனிசாமி பக்கமே உறுதியாக இருப்பார்கள்" என்றார்.

## கோயம்பேடு – நந்தம்பாக்கம் இடையே

# 6 மாதத்தில் மெட்ரோ ரெயில் சேவை: அதிகாரிகள் தகவல்

**சென்னை, அக்.14:** சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

சென்னையில் 47 கி.மீ. தூரமுள்ள மாதவரம்–சோழிங்கநல்லூர் தடத்தில் 46 ரெயில் நிலையங்கள் அமைகின்றன. இந்த தடத்தில் பெரும்பாலும், மேம்பால பாதையாக இருப்பதால் பணிகள் தாமதமின்றி நடந்து வருகின்றன.



மாதவரம், ரெட்டேரி, கொளத்துார், அண்ணா நகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், போரூர், நந்தம்பாக்கம் வரை மேம்பாலத்தில் பாதைகள் அமைத்து தண்டவாளங்கள் அமைக்கும் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. கோயம்பேடு முதல் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் வரையிலான மெட்ரோ கட்டுமானத்தில் தற்போது 70 சதவீதம் பணிகள் முடிந்துள்ளன. அடுத்தகட்டமாக, இந்த தடத்தில் ஆறு மாதங்களில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு

# ரூ.42 லட்சம் நலத்திட்ட உதவி: அமைச்சர் வழங்கினார்

**சென்னை, அக்.14:** அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை அண்ணா நகரில் உள்ள தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.



இவ்விழாவில் சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கு ரூ.42,21,900 மதிப்பிலான உதவித்தொகையை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் முகமது பர்வேஸ் வழங்கினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு உதவிகளை வழங்குவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களால் வழங்கப்படும் விரிவான நலத்திட்டங்களில், திருமண உதவி, மகப்பேறு உதவி, குழந்தைகளின் கல்வி உதவி, விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான உதவி, மாதாந்திர ஓய்வூதியம், இயற்கை மரண உதவி, பணியிட விபத்து மரண உதவி மற்றும் விபத்து ஊனம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் அனைத்து சேவைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மாவட்டந்தோறும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகங்கள் மூலம் பதிவு, புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் கடந்த மே 10 முதல் செப்டம்பர் 30 வரை 3 லட்சத்து 53 ஆயிரத்து 840 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்துள்ளனர். 6 லட்சத்து 88 ஆயிரத்து 674 தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் ரூ.688 கோடியே 8 லட்சத்து 51 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 5 லட்சத்து 88 ஆயிரத்து 296 ஓய்வூதியதாரர்கள் மாதம்தோறும் ரூ.1,200 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை செயலர் கொ. வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் மா. வள்ளலார் மற்றும் கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆளுநர் அதிகாரம் பற்றிய திமுக கருத்தை குறிப்பிட்டு நீதிபதி கேள்வி

# அன்பில் மகேஸ் மீது வழக்கு பதிய ஆளுநர் ஒப்புதல் தேவையில்லை!

## அரசு தரப்பில் நீதிமன்றத்தில் மனு

**சென்னை, அக்.14:** தனியார் பள்ளிகளுக்கு அனுமதியளித்த விவகாரத்தில் ரூ.100 கோடிக்கு மேல் லஞ்சம் பெறப்பட்டுள்ள புகார்கள் மீது முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் மீது வழக்குப்பதிவு செய்ய ஆளுநரின் ஒப்புதல் தேவையில்லை என்று அரசு தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது ஆளுநரின் அதிகாரத்தை தாடி, மீசை என திமுக ஒப்பீடு செய்ததாக குறிப்பிட்டு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் கருத்து தெரிவித்தார்.

முந்தைய திமுக ஆட்சிக்காலத்தில் தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் மற்றும் டிடிசிபி உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி ரூ.100 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்று மோசடி செய்ததாக தனியார் பள்ளி நிர்வாகிகள் அளித்த புகாரின்பேரில், திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ், தனியார் பள்ளிகள் சங்கத் தலைவரான பி.டி.அரசகுமார், முன்னாள் எம்எல்ஏ முத்துக்குமார், சுரேஷ், ராஜா உள்ளிட்டோர் மீது மத்திய குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

தன் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி அன்பில் மகேஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பாக நடந்தது.

அப்போது அன்பில் மகேஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வில்சன், "ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் அரசுத் துறை செயலரின் அனுமதியுடன் அன்பில் மகேஸ் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது" என்றார்.

அதற்கு நீதிபதி, ஓ.. ஆளுநரின் அதிகாரம் பற்றி திமுக எப்போது பேசத் தொடங்கியது, ஆளுநரின் அதிகாரத்தை தாடி, மீசை என ஒப்பீடு செய்தல்லவா பேசியிருக்கிறது என்றார்.

இந்நிலையில் மத்திய குற்றப்பிரிவு போலீஸார் தாக்கல் செய்திருந்த பதில் மனுவில் கூறியிருந்ததாவது: ரூ.100 கோடிக்கு மேல் லஞ்சம் வசூலிக்கப்பட்டு மோசடி செய்ததாக இதுவரை 177 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

'கட்சி நிதி' என்ற பெயரில் பணம் வசூலித்துள்ளனர். மேலும் வழக்குப் பதிவு செய்ய ஆளுநரின் ஒப்புதல் தேவையில்லை. அரசுத் துறைச்செயலரின் ஒப்புதலே போதுமானது. விசாரணையை முடக்கும் விதமாகவே இந்த மனுவைதாக்கல் செய்துள்ளனர். அரசியல் காரணங்களுக்காக தனியார் பள்ளி நிர்வாகிகளை அச்சுறுத்தி வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தவறானவை. எனவே அன்பில் மகேஸ் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து நீதிபதி இந்த வழக்கு விசாரணையை வரும் அக்.29-க்கு தள்ளி வைத்துள்ளார்.




சிகரத்தின்
# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174




## தமிழகத்தில் வெப்பம் குறையாததால்

# மின் தேவை அதிகரிப்பு: அமைச்சர் விளக்கம்

**சென்னை, அக்.14:** வெயிலின் தாக்கம் குறையாததால் தமிழ்நாட்டுக்கான மின் தேவை அதிகமாக உள்ளதாக அமைச்சர் நிர்மல் குமார் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-



வெயிலின் தாக்கம் குறையாததால் தமிழ்நாட்டுக்கான மின் தேவை அதிகமாக உள்ளது. மத்திய மின் தொகுதிப்பில் போதிய மின்சாரம் இல்லாததால் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

பீக் ஹவர்சில் தேவையை பூர்த்தி செய்ய மின்சாரம் கொள்முதல் செய்ய டெண்டர் கோரியுள்ளோம். பீக் ஹவர்ஸ் மின் தேவையை சமாளிக்கவே ரூ.35க்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

மத்திய தொகுதிப்பில் மின்சாரம் கிடைக்காததால் அதிக விலைக்கு வாங்க வேண்டிய நிலை உள்ளது. மின் தேவை கூடுதலாக 30 சதவீதம் அதிகரித்துள்ளதால் மின்சாரம் கொள்முதல் செய்ய டெண்டர் கோரியுள்ளோம்.

காற்றாலை மூலம் 3,000 மெகாவாட் வரை மின்சாரம் தமிழ்நாட்டுக்கு கிடைக்கவில்லை. என்.எல்.சி.யில் இருந்து வர வேண்டிய 1,800 மெகாவாட் மின்சாரமும் கிடைக்கவில்லை. அசாமில் இருந்து 430 மெகாவாட் மின்சாரத்தை ஏற்கனவே கொள்முதல் செய்துவிட்டோம்.

ரூ.35க்கு மின்சாரம் கொள்முதல் செய்வதன் மூலம் தினமும் ரூ.5 கோடி செலவு ஏற்படுகிறது. வாங்கும் மின்சாரத்தை மாலை 6 மணி முதல் இரவு 12 மணி வரை மட்டும்தான் பயன்படுத்துவோம்.

செந்தில் பாலாஜி தன் மீதான வழக்கை மட்டுமே பார்த்தார். தான் சார்ந்த துறையை பார்க்கவில்லை. திமுக ஆட்சியில் தமிழ்நாட்டின் மின் உற்பத்தி 50 % இருந்தது. தற்போது 75 % வரை அதிகரித்துள்ளோம். ரூ.35க்கு கொள்முதல் செய்யும் 1,500 மெ.வாட் மின்சாரம் பீக் ஹவர்ஸ் பயன்பாட்டுக்கு மட்டுமே வினியோகம் செய்யப்படும்.

3,500 மெகாவாட் மின்சாரத்திற்கு டெண்டர் வெளியிட்டாலும் 1,500 மெகாவாட் மட்டுமே வாங்க உள்ளோம்.

அக்.15 முதல் அக்.31 வரையிலான காலகட்டத்திற்கு மட்டுமே இந்த மின்சாரம் பயன்படுத்தப்படும். மின் தேவை அதிகரிப்பு காரணமாக குறுகிய கால டெண்டர் விடப்பட்டுள்ளது.

அதிகவிலை கொடுத்து மின்சாரம் வாங்கவில்லை எனில் 2 அல்லது 3 மணி நேரம் மின்வெட்டு ஏற்படும். வெயிலின் தாக்கம் குறையாததால் தமிழ்நாட்டுக்கான மின் தேவை அதிகமாக உள்ளது.

திமுக ஆட்சியில் நீண்டகால செயல்திட்டங்கள் எதையும் செயல்படுத்தாததால் இவ்வளவு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## மின் தடை குறித்த

# செய்தி வராத நாளே இல்லை: செந்தில் பாலாஜி விமர்சனம்

**சென்னை, அக்.14:** முழுக்க முழுக்க வெளிச்சந்தையில் மின்சாரத்தை வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-





மின் தடை குறித்த செய்தி வராத நாளே இல்லை. அரசு கூட்டங்கள், தலைமை செயலகத்தில் மின்வெட்டு ஏற்படுகிறது. பட்டமளிப்பு விழாவில் தொடங்கி தலைமைச்செயலகம் வரை மின்வெட்டு நீண்டுள்ளது.

மின் துறை அமைச்சர் நிர்மல்குமார் தனது துறையை தவிர்த்து மற்ற துறைகளுக்கு பதில் அளிப்பார். வெறும் ரீல்ஸை மட்டுமே முன்வைத்து ஆட்சிக்கு வந்த டம்மி முதல்-அமைச்சர், மக்கள் இன்னல்களை பற்றி கவலைப்படவில்லை.

மின்வெட்டுக்கு ப்பியூஸ் கேரியர் திருட்டு என்றார்கள், பின்பு பஞ்சாப் சென்று பாருங்கள் என்றார்கள். தவெக ஆட்சி பொறுப்பேற்றது முதல் மின்வெட்டு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திமுக ஆட்சியின்போது எந்தவித தடையும் இன்றி சீராக மின்விநியோகம் செய்யப்பட்டது. தவெக ஆட்சி பொறுப்பேற்று 5 மாதங்களாகியும் மின்வெட்டை சரி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மின்சாரம் கொள்முதல் செய்ய நவம்பர், டிசம்பரிலேயே ஏற்பாடு செய்து டெண்டர் விடுவோம்.

திமுக ஆட்சியில் ஆண்டுதோறும் மின் தேவை அதிகரித்துக்கொண்டே வந்தது. 5 ஆண்டுகளில் 4,349 மெகாவாட் மின்சார தேவை அதிகரித்தது. 8,600 மில்லியன் யூனிட் அளவுக்கு உபரியாக இருந்ததை வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்தோம். மின்மாற்றிகள் குறைந்த அளவில் பழுதாககூடிய நமது மாநிலத்தில் எப்படி மின்வெட்டு ஏற்படுகிறது.

திமுக ஆட்சியின்போது டான் ஜெட் கோவின் மின் உற்பத்தி 13,000 மெகாவாட் வரை அதிகரிக்கப்பட்டது.ஆந்திராவில் மின்சாரம் கொள்முதல் செய்வதாக தகவல் வந்துள்ளது. அதற்குள் நான் செல்லவில்லை.

தமிழ்நாட்டின் சொந்த மின் உற்பத்தியை குறைத்து வெளிச்சந்தையில் கொள்முதல் செய்வதற்கான முன்னெடுப்புகளை எடுத்துள்ளார் அமைச்சர் நிர்மல் குமார்.

வெளிச்சந்தையில் யூனிட்டிற்கு ரூ35-க்கு கொள்முதல் செய்வது, மின்துறையின் ஒட்டுமொத்த நிதிநிலையை சீரழித்துவிடும். திமுக ஆட்சியில் ரூ.20க்கு மின்சாரம் கொள்முதல் செய்ததை விமர்சித்த தவெக ரூ.35க்கு கொள்முதல் செய்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் பொறியியல் கல்லூரி முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான வரவேற்பு விழா





**நாமக்கல், அக்.14:** திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் பொறியியல் கல்லூரி மற்றும் தகவல் மற்றும் மேலாண்மையியல் கல்லூரியில் 2026 27ஆம் கல்வியாண்டில் புதிதாகச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான வரவேற்பு விழா விவேகானந்தா கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் தாளாளர் மற்றும் செயலாளர் பேராசிரியர் முனைவர் கே. கருணாநிதி விழாவிற்குத் தலைமை வகித்தார்.

விவேகானந்தா மகளிர் பொறியியல் கல்லூரியின் இறுதியாண்டு மாணவி எஸ். பி.கோபிகா வரவேற்புரையாற்றினார்.

முதல்வர் முனைவர் கே. சி. கே. விஜயகுமார், இயக்குநர் முனைவர் வி. மோகனசுந்தரம், முதல்வர் முனைவர் எம். தேவி ஆகியோர் முதலாம் ஆண்டு மாணவிகளிடம், கல்லூரி வாழ்க்கை என்பது தங்களது எதிர்காலத்தை உருவாக்கும் முக்கியமான காலகட்டமாகும் என்றும், புதிய சூழலுக்குப் பயப்படாமல் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் உரையாற்றினர்.

கல்லூரியின் நிர்வாக அதிகாரி எம். சொக்கலிங்கம் தனது வாழ்த்துரையில், மாணவிகள் ஒழுக்கம், தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும், நிர்வாக இயக்குநர் பேராசிரியர் முனைவர் எஸ். குப்புசாமி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ஆர். பாலகுருநாதன் ஆகியோர், இன்றைய சிறிய முயற்சியே நாளைய பெரிய வெற்றிக்கு அடித்தளம் என்று சிறப்புரையாற்றினர்.

விழாவின் சிறப்பு விருந்தினராக முனைவர் ஐ. ஜெகன், தலைமை நிர்வாக அதிகாரி, வின் யுவர் வீக்னஸ் ஊக்குவிப்பு பயிற்சி நிறுவனம், கலந்து கொண்டு மாணவிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உரையாற்றினார்.

அவர் தனது உரையில், தினமும் வகுப்புகளைத் தவறாமல் கவனிக்க வேண்டும், ஆசிரியர்களின் அறிவுரைகளை மதித்து பின்பற்ற வேண்டும், நேரத்தை வீணாக்காமல் திட்டமிட்டு பயன்படுத்த வேண்டும், புத்தக அறிவுடன் புதிய திறன்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும், நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் இணைந்து முன்னேற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், தோல்விகளைப் பார்த்துத் துவண்டு விடாமல், அவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு முன்னேற வேண்டும் என்று கூறி, புதிய மாணவிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் முதலாம் ஆண்டு மாணவி வி. மதி நன்றியுரையாற்றினார்.

இவ்விழாவில் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் முதலாம் ஆண்டு மாணவிகள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.




Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.